திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் துறையிலே புதிதாக நியமிக்கப்பட்ட இந்த நியமனங்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக பெயர்களைக்கேட்டு, கொடுக்கப்பட்டதா? அல்லது பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக பெயர்கள் பெறப்பட்டு, 6 காலி இடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன.

விவசாயத் தொழிலாளிகளுக்கு இன்சூரன்ஸ் திட்டம்

216—(*வினா எண். 964) திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளிகளுக்கு இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வரும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : விவசாயக் கூலிகள், சிறு விவசாயிகள், கைவினைஞர்கள், அதைப்போன்று சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்தும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவித் திட்டம் என்ற ஒரு திட்டம் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து செயல் படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைமலை நகரில் வீட்டுவரி.

217—(*வினா எண். 3410) திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறைமலை நகரில் விதிக்கப்பட்டுள்ள வீட்டு வரி சென்னை மாநகராட்சியை விட அதிகமாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைக் குறைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளது?

1989 மே 5]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே,

(அ) மறைமலை நகர் நகரியத்தில் விதிக்கப்பட்டுள்ள வீட்டுவரி, சென்னை மாநகராட்சியில் விதிக்கப்பட்டுள்ள வீட்டு வரியைவிட அதிகமில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவல் சென்னை மாநகரில் 700 சதுர அடி உடைய வீட்டிற்கு 125 ரூபாய் ஆலந்தூர், தாம்பரம் போன்ற நகரப்பகுதிகளில் 1,100 சதுர அடி உடைய வீட்டிற்கு 350 ரூபாய் வீட்டு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மறைமலை நகரில் 600 சதுர அடி வீட்டிற்கு 300 ரூபாய் வீட்டு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. சென்னை மாநகரில் விதிக்கப்பட்டிருப்பதைவிட இது அதிகமாகும். அங்கே இருக்கின்ற குடியிருப்புப் பகுதிகளுக்கும் தொழிற்பேட்டை பகுதிகளுக்கும் பாகுபாடு இல்லாமல் வீட்டுவரி விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இதைக் குறைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் சொத்து வரி, பொது வரி, தெருவிளக்கு வரி மற்றும் கல்வி வரி ஆகியவற்றையும் சேர்த்து விதிக்கப்படுகிறது. மொத்த ஆண்டு வருவாய் மதிப்பில் குறைந்தபட்சம் 12.5 விழுக்காடும் அதிகபட்சம் 23 விழுக்காடும் நான்கு பிரிவுகளாகப் பிரித்து வசூலிக்கப்படுகிறது. செங்கை-அண்ணா மாவட்டத்தில் மறைமலை நகர் 1985 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. மேற்படி நகரியக் குழு 12—2—1986-ந்தேதி கூட்டத்தில் மேற்படி வீட்டுவரி ஆண்டு வாடகை மதிப்பில் குறைந்தபட்சம் 4 விழுக்காடும் அதிகபட்சம் 20 விழுக்காடும் விதித்து, வசூலிக்க முடிவு செய்துள்ளது. 1986-ம் ஆண்டு அரசால் நிர்ணயிக்கப்பட்ட வரி சீராய்வு அலுவலரால் வரி நிர்ணயம் செய்யப்பட்டு, 1—4—1986 முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த நிர்ணயத்தை ஆட்சேபித்து 1,132 மனுக்கள் செயல் அலுவலரால் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, பின் 17,560 ரூபாய் வரி குறைப்பு செய்யப்பட்டது. அதன் பிறகும் நகரியக் குழு 127 மேல் முறையீட்டு மனுக்களைப் பெற்று, நிர்ணயிக்கப்பட்ட வீட்டுவரி நியாயமானது என்று நகரியக் குழு முடிவு செய்து, அந்த மனுக்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

(முற்பகல் 9–30)

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்து மதிப்பைப் பொறுத்தவரையில் கேப்பிட்டல் காஸ்டை அடிப்படையாகக் கொண்டு வீட்டு வரி நிர்ணயிக்கும்போது—தற்போதைய விலைவாசி ஏற்றத்தின் காரணத்தால்,

அண்மைக்காலங்களில் கட்டப்படும் வீடுகள் அளவில் சிறிதாயினும் அதிகமான வீட்டுவரி கட்டவேண்டியுள்ளது. எனவே மறைமலை நகரைப் பொறுத்தவரையில் கட்டிடத்தின் பரப்பளவைக் கொண்டு அதாவது 'ப்ளின்த் ஏரியா'-வினுடைய அளவை அடிப்படையாகக் கொண்டு வீட்டு வரியை நிர்ணயிக்கின்ற வகையில் மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கோ. பூவராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைமலை நகரில் கட்டப்பட்டிருக்கின்ற பல வீடுகளைப் பொறுத்தவரையில் வீட்டுவசதி வாரியம், எம். எம். டி. ஏ. என்று இரு பகுதிகளாகக் கட்டியிருக்கிறார்கள். இந்த இரு பகுதி வீடுகளுக்கும் ஒரே மாதிரி வரி விதிப்பு உள்ளதா? எத்தனை வீடுகள் இந்த வரி விதிப்பின் கீழ் வந்திருக்கின்றன? இன்னும் யாருக்கும் ஒதுக்கப்படாமல் விற்கப்படாமல் ஏராளமான வீடுகள் இருப்பது பற்றி அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. மறைமலை நகர் நகரியத்தில் உள்ள மொத்த வீடுகள் 5,648. மறை மலை நகரில் மட்டும் உள்ள குடியிருப்பு வீடுகள் 1,280 மறை மலை நகரியத்தில் உள்ள தொழிற்கூடங்கள் 127, நகரியத்தைச் சார்ந்த மற்ற கிராமங்களில் உள்ள வீடுகள் 4,241. வரிவிதிப்பைப் பொறுத்தவரையில் 4 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடு வரையில் விதிக்கலாம் என்ற முறைதான் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியினுடைய வரி விதிப்பு எத்தனை பெர்சன்ட் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது? ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்-க்குப் போனால் அங்கே வீட்டினுடைய மதிப்பைப் பொறுத்தவரையில் கைட்லைன்ஸ் வைத்திருக்கிறார்கள். அந்த பேஸிஸிலே வரி போடுகிறார்களா? வீட்டினுடைய வாடகை மதிப்பு என்று ஒரு சிஸ்டம் வைத்திருக்கிறார்களே, அந்த அடிப்படையில் போடும்போது அதிலே பலவிதமான சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஏனென்றால் வாடகையை ரொம்பக் குறைத்து சொல்கிறார்கள். மிகவும் குறைத்துச் சொல்கிறார்கள். எனவே எந்த அடிப்படையில் நீங்கள் வரி நிர்ணயம் பண்ணுகிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1989 மே 5]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் ; பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வரி விதிப்பின்போது அடி நிலத்தின் மதிபபையும் கணக்கிடுகிறார்கள். கட்டிடத்தின் மதிப்பையும் மதிப்பிடுகிறார்கள். இதிலே அரசாங்கம் தெரிவிக்கிற விதிமுறையின் கீழ் பொது வரி, தெருவிளக்கு வரி, கல்வி வரி போன்ற இவைகளை எல்லாம் கணக்கிட்டு வரி சீரமைப்புக் குழு, டிவிஷன் ஆபீஸர்கள் இதிலே ஒரு முடிவுக்கு வந்து இந்த அளவுக்கு வரி கட்ட வேண்டும் என்று சொல்லி விதிக்கிறார்கள். இதுதான் இபபோது நடைமுறையில் இருந்து வருகிறது.

கண்டிராமாணிக்கம் கிராமத்தில் ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கடன்.

218 —(*வினா எண். 3445) திரு. கோ. வீரையன் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கண்டிராமாணிக்கம் கிராமத்தில் 1988–89 ஆம் ஆண்டு ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கடன் வழங்க தேர்வு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்கள்?

(ஆ) அதில் எத்தனை பேருக்கு கடன் வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த கண்டிராமாணிக்கம் கிராமத்தில் 1988–89 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் வழங்க 30 பேர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

(ஆ) தேர்வு செய்யப்பட்ட 30 பேர்களில் 11 பேருக்கு இத்திட்டத்தின் கீழ் மானியத்துடன் இணைந்த கடன் 1988–89 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

திரு. கோ. வீரையன் : பேரவைத் தலைவர் அவர்களே, 30 பேர்கள் தேர்வு செய்யப்பட்டு மானியத்துடன் 11 பேர்களுக்குக் கடன் வழங்கப்பட்டதாகச் சொன்னார்கள். மேலும் 15 பேர்களுக்கும் கடன் வழங்குவதற்கான மானியங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டு அந்த வங்கி, கடன் கொடுக்க மறுத்ததால் அந்த மானியம் திருப்பிக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.